ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ஶடகோபாய நம: ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிகமாந்த மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

# திவ்யப்ரபந்த அநுஸந்தாநம்

Page


பொதுத் தனியன்.................................... 2
திருப்பல்லாண்டு.................................... 3
திருப்பள்ளியெழுச்சி.................................. 5
திருப்பாவை........................................ 7
அமலன் ஆதிபிரான் ................................. 14
பெரிய திருமொழி 1-7, 2-2, 1-6.................... 16
கண்ணிநுண் சிறுத்தாம்பு............................ 21
அடைக்கலப்பத்து .................................. 23
ஆதிவண்சடகோபன் அடைக்கலப்பத்து .............. 25
லக்ஷ்மீந்ருஸிம்ஹ அடைக்கலப்பத்து................. 27
சாற்றுமுறை ....................................... 29


## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

(April 2009)

ஸ்ரீமத் வேதமார்க ப்ரதிஷ்டாபனாசார்ய,
பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய,
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய,
ஸ்ரீபாகவத் ராமானுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம,
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேசவக,
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

*ஶ்ரீ:*

*கேஶவார்ய க்ருபா பாத்ரம் தீஶமாதி குணார்ணவம் |*
*ஶ்ரீஶடாரி யதீஶானம் தேசிகேந்த்ரமஹம் பஜே ||*

*ராமானுஜதயா பாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |*
*ஶ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||*

*லக்ஷ்மீநாத ஸமாரம்பாஆம் நாத யாமுன மத்யமாம் |*
*அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் ||*

*யோ நித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம*
*வ்யாமோஹஸ் ததிதராணி த்ருணாயமேனே |*
*அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:*
*ராமானுஜாஸ்ய ஶரணௌ ஶரணம் பரபத்த்யே ||*

*மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்*
*ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |*
*ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்*
*ஶ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||*

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்ட நாத2
ஶ்ரீ ப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந்.
ப4க்தாங்க்4ரி ரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஶ்ரீமத் பராங்குஶ முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

## பெரியாழ்வார் அருளிச் செய்த திருமொழி

குருமுக மனதீத்ய ப்ராஹ வேதான ஶேஷாந்
நரபதி பரிக்லுப்தம் ஶுல்க மாதாது காம:
ஶ்வஶுர மமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம்தம் விஷ்ணுசித்தம் நமாமி||

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்*
சொன்னார் கழற்கமலம் சூடினோம்* – முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்,* கீழ்மையினிற்சேரும்–
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்று*
ஈண்டியசங்கம் எடுத்தூத* – வேண்டிய
வேதங்களோதி விரைந்துகிழியறுத்தான்*
பாதங்கள்யாமுடையபற்று.

** பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு * பலகோடி நூறாயிரம்*
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!* உன் சேவடி செவ்வி திருக்காப்பு. (2) 1

** அடியோமோடும்நின்னோடும்* பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு*
வடிவாய் நின்வல மார்பினில் *வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும்* சுடராழியும் பல்லாண்டு*
படைபோர் புக்கு முழங்கும்* அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே. (2) 2

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் *வந்து மண்ணும் மணமும் கொண்மின்*
கூழாட்பட்டு நின்றீர்களை* எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்*
ஏழாட்காலும் பழிப்பிலோம்* நாங்கள் இராக்கதர்வாழ்* இலங்கை–
பாழாளாகப் படை பொருதானுக்குப்* பல்லாண்டு கூறுதமே. 3

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து * எங்கள் குழாம் புகுந்து*
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி* வந்துஒல்லைக்கூடுமினோ*
நாடும் நகரமும் நன்கறிய* நமோ நாராயணாயவென்று*
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!* வந்து பல்லாண்டு கூறுமினே. 4

அண்டக்குலத்துக்கு அதிபதியாகி* அசுரர் இராக்கதரை*
இண்டைக்குலத்தை எடுத்துக்களைந்த* இருடீகேசன்தனக்கு*
தொண்டக்குலத்திலுள்ளீர்!* வந்தடிதொழுது ஆயிரநாமம்சொல்லி*
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து* பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே. 5

எந்தை தந்தை தந்தை தந்தைதன் மூத்தப்பன் *ஏழ்படி கால்தொடங்கி*
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்* திருவோணத் திருவிழவில்*
அந்தியம்போதில் அரியுருவாகி* அரியை அழித்தவனை*
பந்தனை தீரப் பல்லாண்டு* பல்லாயிரத்தாண்டென்று பாடுதமே. 6

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி* திகழ் திருச்சக்கரத்தின்*
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று* குடிகுடி ஆட்செய்கின்றோம்*
மாயப் பொருபடை வாணனை* ஆயிரந்தோளும் பொழிகுருதி–
பாய * சுழற்றிய ஆழி வல்லானுக்குப்* பல்லாண்டு கூறுதுமே. 7

*நெய்யிடை நல்லதோர் சோறும்* நியதமும் அத்தாணிச் சேவகமும்*
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு * காதுக்குக் குண்டலமும்*
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து *என்னை வெள்ளுயிராக்க வல்ல*
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்* பல்லாண்டு கூறுவனே. 8*

*உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்துக்* கலத்ததுண்டு*
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன* சூடும் இத்தொண்டர்களோம்*
விடுத்த திசைக்கருமம் திருத்தித்* திருவோணத் திருவிழவில்*
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்* பல்லாண்டு கூறுதுமே. 9*

*எந்நாள்எம்பெருமான் *உன்தனக்கு அடியோமென்று எழுத்துப்பட்ட–
அந்நாளே *அடியோங்கள் அடிக்குடில்* வீடுபெற்று உய்ந்ததுகாண்*
செந்நாள் தோற்றித்* திருமதுரையுள் சிலைகுனித்து *ஐந்தலைய–
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!* உன்னைப் பல்லாண்டு கூறுதுமே. 10*

*** அல்வழக்கொன்றுமில்லா *அணிகோட்டியர்கோன்* அபிமானதுங்கன்–
செல்வனைப்போலத் * திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன்*
நல்வகையால் நமோநாராயணா என்று *நாமம் பலபரவி*
பல்வகையாலும் பவித்திரனே! *உன்னைப் பல்லாண்டு கூறுவனே. (2) 11*

*** பல்லாண்டென்று பவித்திரனைப்* பரமேட்டியை *சார்ங்கம் என்னும்–
வில்லாண்டான் தன்னை* வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்*
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்* நமோ நாராயணாயவென்று*
பல்லாண்டும் பரமாத்மனை* சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே. (2) 12*

## திருப்பள்ளியெழுச்சி

தமேவமத்வா பரவாஸுதேவம் ரங்கேசயம் ராஜவதர்கணீயம்
ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம் பக்தாங்க்ரி ரேணும் பகவந்த மீடே.

மண்டங் குடியென்பர் மாமறையோர்,* மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடி தொன்னகரம்,* – வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்து அம்மானைப்,* பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.

917:##
கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்*
 கனவிருள் அகன்றது காலையம் பொழுதாய்,*
மதுவிரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்*
 வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி,*
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த*
 இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்,*
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்*
 அரங்கத்து அம்மா! பள்ளி எழுந்து அருளாயே. (2) (1)

918:
கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்*
 கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ,*
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்*
 ஈன்பனி நனைந்த தம் இருசிறகு உதறி,*
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்*
 வெள்ளெயிறுறவதன் விடத்தனுக்கு அனுங்கி,*
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (2)

919:
சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்*
 துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி,*
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ*
 பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின்,*
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற*
 வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ,*
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (3)

920:
மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்*
 வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்,*
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்*
 இருந்தின சுரும்பினம் இலங்கையர் குலத்தை,*
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!*
 மாமுனி வேள்வியைக் காத்து,* அவ பிரதம்–
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம் அரசே!*
 அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (4)

921:
புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய்*
 போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி,*
கலந்தது குணதிசை கனைகடல் அரவம்*
 களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த,*
அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான்*

அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா*
இலங்கையர் கோன் வழிபாடு செய்கோயில்*
எம்பெருமான்!பள்ளி எழுந்து அருளாயே. (5)

922:
இரவியர் மணிநெடும் தேரொடும் இவரோ?*
இறையவர் பதினொரு விடையரும் இவரோ?*
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ?*
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி,*
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்*
குமரதண்டம் புகுந் தீண்டிய வெள்ளம்,*
அருவரை அனைய நின் கோயில்முன் இவரோ?*
அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (6)

923:
அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ?*
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ?*
இந்திரன் ஆனையும் தானும் வந்து இவனோ?*
எம்பெருமான் உன் கோயிலின் வாசல்,*
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க*
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்,*
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ?*
அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (7)

924:
வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க*
மாநிதி கபிலையொண் கண்ணடி முதலா,*
எம்பெருமான் படி மக்கலம் காண்டற்கு*
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்,*
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ?*
தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி,*
அம்பரதலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்*
அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (8)

925:##
ஏதமில் தண்ணுமை யெக்கம்மத் தளியே*
யாழ்குழல் முழவமோடு இசைதிசை கெழுமி,*
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்*
கந்தரு வரவர் கங்குலுள் எல்லாம்,*
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்*
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்,*
ஆதலில் அவர்க்கு நாளோலக்கம் அருள*
அரங்கத்து அம்மா!பள்ளி எழுந்து அருளாயே. (2) (9)

926:##
கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?*
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?*
துடியிடையார் சுரி குழல் பிழிந்துதறித்*
துகிலுடுத்து ஏறினர் சூழ்புனல் அரங்கா,*
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து*
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும்-
அடியனை,* அளியன் என்று அருளி உன் அடியார்க்கு-
ஆட்படுத்தாய்!* பள்ளி எழுந்து அருளாயே! (2) (10)

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை

தனியன்

நீளாதுங்க ஸ்தநகிரிதடீ ஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதி சதசிரஸ் ஸித்தமத்யா பயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யாபலாத் க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யை நமஇதமிதம் பூய ஏவாஸ்து பூய:

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்
இன்னிசையால் பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை
பூமாலை சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்
நாடி நீ வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

474:##
மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்*
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்*
கார் மேனி செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்*
நாராயணனே நமக்கே பறை தருவான்*
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்

475:
வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்*
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்*
பையத் துயின்ற பரமனடி பாடி*
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்*
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி*
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

476:##
ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி*
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்*
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரி பெய்து*
ஓங்கு பெறும் செந் நெல் ஊடு கயலுகளப்*
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்*
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி–
வாங்க * குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்*
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

477:
ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்*

ஆழி உள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி*
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்*
பாழியம் தோளுடைய பற்பனுபன் கையில்*
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து*
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்*
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்*
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

478:
மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத்*
தூய பெரு நீர் யமுனைத் துறைவனை*
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்*
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்*
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது*
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்கப்*
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்.

479:
புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்*
வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ*
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு*
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி*
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை*
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்*
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

480:
கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தான்* கலந்து–
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே*
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து*
வாச நறும் குழல் ஆய்ச்சியர்* மத்தினுல்–
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ*
நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி*
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ*
தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய்

481:
கீழ் வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு*
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்*
போவான் போகின்றுரைப் போகாமல் காத்து* உன்னைக்–
கூவுவான் வந்து நின்றோம்* கோதுகலமுடைய–
பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு*
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்*
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

482:
தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரியத்*
தூபம் கமழத் துயிலணைமேல் கண் வளரும்*

மாமான் மகளே மணிக் கதவம் தாழ் திறவாய்*
மாமீர் அவளை எழுப்பீரோ* உன் மகள் தான்–
ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ*
ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ*
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
நாமன் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்

483:
நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!*
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்*
நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்*
போற்றப் பறை தரும் புண்ணியனால் பண்டு ஒரு நாள்*
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணனும்*
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ*
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே*
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.

484:
கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து*
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்*
குற்றம் ஒன்றில்லாத கோவலர்த்தம் பொற்கொடியே*
புற்று அரவு அல்குல் புனமயிலே போதராய்*
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து * நின்–
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட*
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி *நீ–
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்

485:
கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி*
நினைத்து முலை வழியே நின்று பால் சோர*
நனைத்து இல்லம் சேறாக்கும் நற் செல்வன் தங்காய்*
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்*
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற*
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்*
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்*
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோர் எம்பாவாய்

486:
புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்*
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்தி மை பாடிப் போய்ப்*
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்*
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று*
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்*
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே*
பள்ளிக் கிடத்தியோ! பாவாய்! நீ நன் நாளால்*
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்.

487:
உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்*
செங்கழுனீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்*
செங்கற் பொடிக் கூரை வெண்பல் தவத்தவர்*

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதன்றார்*
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்*
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்*
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்*
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்.

488:
எல்லே! இளம் கிளியே இன்னம் உறங்குதியோ*
சில் என்று அழையேன் மின் நங்கைமீர் போதருகின்றேன்*
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்*
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக*
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை*
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்து எண்ணிக்கொள்*
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க-
வல்லானை* மாயனைப் பாடேலோர் எம்பாவாய்

489:##
நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய*
கோயில் காப்பானே! கொடி தோன்றும் தோரண-
வாயில் காப்பானே!* மணிக் கதவம் தாள் திறவாய்*
ஆயர் சிறுமியரோமுக்கு* அறை பறை-
மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்*
தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்*
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா!* நீ-
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய்

490:
அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்*
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்*
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே*
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்*
அம்பரம் ஊட அறுத்து ஓங்கி உளகு அளந்த*
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்*
செம் பொற் கழலடிச் செல்வா பலதேவா*
உம்பியும் நீயுன் உறங்கேலோர் எம்பாவாய்.

491:##
உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்*
நந்தகோபன் மருமகளே நப்பின்னாய்*
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்*
வந்து எங்கும் கோழி அழைத்தன காண்* மாதவிப்-
பந்தல் மேல் பல் கால் குயிலினங்கள் கூவின காண்*
பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்*
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப*
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

492:
குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல்*
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்*
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்*
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்*

மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை*
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்*
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால்*
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்

493:
முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று*
கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்*
செப்பம் உடையாய் திறல் உடையாய் *செற்றார்க்கு–
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்*
செப்பென்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்*
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்*
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை*
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய்

494:
ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப*
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்*
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்*
ஊற்றம் உடையாய் பெரியாய் *உலகினில்–
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்*
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற் கண்*
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே*
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய்

495:
அங்கண் மாஞாலத்து அரசர் *அபிமான–
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே*
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்*
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே*
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ*
திங்களும் ஆதித்தனும் எழுந்தாற் போல்*
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்*
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்

496:##
மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்*
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி*
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்*
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா* உன்–
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் *கோப்புடைய–
சீரிய சிங்காசனத்து இருந்து *யாம் வந்த–
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

497:##
அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி*
சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி*
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி*
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி*
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி*

வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி*
என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்*
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

498:
ஒருத்தி மகனாய்ப் பிறந்து* ஓர் இரவில்-
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்*
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த*
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்*
நெருப்பென்ன நின்ற நெடுமாலே!,* உன்னை-
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்*
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி*
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

499:
மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்*
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்*
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன*
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே*
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே*
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே*
கோல விளக்கே கொடியே விதானமே*
ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய்

500:##
கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா *உன்தன்னைப்-
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்*
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்*
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே*
பாடகமே என்றனைய பலகலனும் யாம் அணிவோம்*
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு*
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்*
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

501:##
கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்*
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்*
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்*
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா* உன்தன்னோடு-
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது*
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னை*
சிறு பேர் அழைத்தனம் சீறி அருளாதே*
இறைவா நீ தாராய் பறையேலோர் எம்பாவாய்

502:##
சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து* உன்-
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்*
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து *நீ-
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது*
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா*
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் *உன் தன்னோடு-

*உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்*

*503:##*
*வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை*
திங்கள் திருமுகத்து சேய் இழையார் சென்று இறைஞ்சி*
அங்கப் பறை கொண்ட ஆற்றை* அணி புதுவைப்-
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன*
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே*
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத்தோள்*
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்*
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.*

*கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணி மாடம் தோன்றும் ஊர்
நீதியால் நல்ல பத்தர் வாழும் ஊர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்
பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பது வம்பு.*

*திருவாடிப் பூரத்து செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே
பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற்கே கண்ணியுகந்தருளிதாள் வாழியே
மருவாரும் திருமல்லி வள நாடி வாழியே
வண்புதுவை நகர்க் கோதை மலர்ப் பதங்கள் வாழியே*

*ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம். மங்களம்*

## திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான்

ஆபாத சூடமநுபூய ஹரிம்ஶயாநம்
மத்த்யேகவேர துஹிதுர்முதிதாந்தராத்மா
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோநிஶ்சிகாய மநவை முநிவாஹநந்தம்.

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடை உந்தி,
தேட்டரும் உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்,
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து,
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே.

** அமலன் ஆதிபிரான் * அடியார்க்கு என்னை ஆட்படுத்த–
விமலன், * விண்ணவர் கோன் * விரையார் பொழில் வேங்கடவன், *
நிமலன் நின்மலன் நீதி வானவன், * நீள்மதிள் அரங்கத்து அம்மான், * திருக்–
கமல பாதம் வந்து * என்கண்ணினுள்ளன ஒக்கின்றதே. (2) (1)

உவந்த உள்ளத்தனாய் * உலகம் அளந்து அண்டமுற, *
நிவந்த நீள்முடியன் * அன்று நேர்ந்த நிசாசரரை, *
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் * கடியார்பொழில் அரங்கத் தம்மான், *
அரைச்சிவந்த ஆடையின் மேல் * சென்றதாம் என் சிந்தனையே. (2)

** மந்தி பாய் * வட வேங்கட மாமலை, * வானவர்கள்,–
சந்தி செய்ய நின்றான் * அரங்கத்து அரவின் அணையான், *
அந்தி போல் நிறத்து ஆடையும் * அதன்மேல் அயனைப் படைத்ததோர் எழில் *
உந்தி மேலதன்றோ * அடியேன் உள்ளத்து இன்னுயிரே. (2) (3)

சதுரமா மதிள்சூழ் * இலங்கைக்கு இறைவன் தலைபத்து–
உதிர வோட்டி, * ஓர் வெங்கணை * உய்த்தவன் ஓத வண்ணன் *
மதுரமா வண்டு பாட * மாமயில் ஆடரங்கத்து அம்மான், * திருவயிற்று–
உதர பந்தம் * என் உள்ளத்துள் நின்று உலாகின்றதே. (4)

பாரமாய * பழவினை பற்றறுத்து, * என்னைத்தன்–
வாரமாக்கி வைத்தான் * வைத்ததன்றி என்னுள் புகுந்தான், *
கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன் * அரங்கத்து அம்மான், * திரு–
வார மார்பதன்றோ * அடியேனை ஆட்கொண்டதே. (5)

துண்ட வெண்பிறையான் * துயர் தீர்த்தவன் * அஞ்சிறைய–
வண்டுவாழ் பொழில்சூழ் * அரங்கநகர் மேய அப்பன் *
அண்டர் அண்ட பகிரண்டத்து * ஒரு மாநிலம் எழுமால்வரை, * முற்றும்–
உண்ட கண்டம் கண்டீர் * அடியேனை உய்யக்கொண்டதே. (6)

கையினார் * சுரி சங்கனல் ஆழியர், * நீள்வரை போல்–
மெய்யனார் * துளப விரையார் கமழ் நீள் முடியெம்
ஐயனார், * அணியரங்கனார் * அரவின் அணைமிசை மேய மாயனார், *
செய்ய வாய் ஐயோ! * என்னைச் சிந்தை கவர்ந்ததுவே! (7)

பரியனாகி வந்த * அவுணன் உடல்கீண்ட, * அமரர்க்கு–
அரிய ஆதிபிரான் * அரங்கத்து அமலன் முகத்து, *
கரியவாகிப் புடைபரந்து * மிளிர்ந்து செவ்வரியோடி, * நீண்டவப்–
பெரிய வாய கண்கள் * என்னைப் பேதைமை செய்தனவே! (8)

** ஆலமா மரத்தின் இலைமேல் * ஒரு பாலகனாய், *
ஞாலம் ஏழும் உண்டான் * அரங்கத்து அரவின் அணையான், *
கோல மாமணி ஆரமும் * முத்துத் தாமமும் முடிவில்ல தோரெழில் *
நீல மேனி ஐயோ! * நிறை கொண்டது என் நெஞ்சினையே! (2) (9)

(சாற்றுமுறை பாசுரம்)
** கொண்டல் வண்ணனைக் * கோவலனாய் வெண்ணெய்-
உண்ட வாயன் * என்னுள்ளம் கவர்ந்தானை, *
அண்டர் கோன் அணி அரங்கன் * என் அமுதினைக்-
கண்ட கண்கள், * மற்றொன்றினைக் * காணாவே. (2) (10)

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

## *திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி*

*கலயாமி கலித்வம்சம்* கவிம் லோகதிவாகரம்*
*யஸ்ய கோபி: ப்ரகாஸாபி: ஆவித்யம் நிஹதம்தம:*

*வாழிபரகாலன் வாழிகலிகன்றி*
*வாழிகுறையலூர் வாழ்வேந்தன்*
*வாழியரோ மாயோனை வாழ்வலியால் மந்திரங்கொள்*
*மங்கையர்க்கோன் தூயோன் சுடர்மானவேல்.*

*நெஞ்சுக்கிருள்கடிதீபம் அடங்கா நெடும்பிறவி*
*நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ் நன்னூல் துறைகள்*
*அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப்*
*பஞ்சுக்கனலின் பொறி பரகாலன் பனுவல்களே.*

*எங்கள்கதியே! இராமானுசமுனியே!*
*சங்கைகெடுத்தாண்ட தவராசா*
*பொங்குபுகழ் மங்கையர்க்கோனீந்த மறையாயிரமனைத்தும்*
*தங்குமனம் நீயெனக்குத் தா.*

ஏழாம் திருமொழி – அங்கண்ஞலமஞ்ச

1008:##
அங்கண் ஞாலமஞ்ச* அங்கோராளரியாய்*
அவுணன் பொங்கவாகம் வள்ளுகிரால்* போழ்ந்த புனிதனிடம்*
பைங்கணானைக் கொம்புகொண்டு* பத்திமையால்*
அடிக்கீழ்ச் செங்கணாளியிட்டிறைஞ்சும்* சிங்கவேள்குன்றமே. 1.7.1

1009:
அலைத்தபேழ்வாய்* வாளெயிற்றோர்க் கோளரியாய்*
அவுணன் கொலைக்கையாளன் நெஞ்சிடந்த* கூருகிருளனிடம்*
மலைத்தசெல்சாத்தெறிந்தபூசல்* வன்துடிவாய்கடுப்ப*
சிலைக்கைவேடர் தெழிப்பறுத* சிங்கவேள்குன்றமே. 1.7.2

1010:
ஏய்ந்தபேழ்வாய்* வாளெயிற்றோர்க்கோளரியாய்*
அவுணன் வாய்ந்தவாகம் வள்ளுகிரால்* வகிர்ந்தவம்மானதனிடம்*
ஓய்ந்தமாவும் உடைந்தகுன்றும்* அன்றியும் நின்றழலால்*
தேய்ந்தவேயுமல்லதில்லாச்* சிங்கவேள்குன்றமே. 1.7.3

1011:
எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோன்& ஏதலினின்னுயிரை வவ்வி*
ஆகம்வள்ளுகிரால்* வகிர்ந்தவம்மானதிடம்*
கவ்வுநாயும்கழுகும்* உச்சிபோதொடுகால்சுழன்று*
தெய்வமல்லால் செல்லவொண்ணாச்* சிங்கவேள்குன்றமே. 1.7.4

1012:
மென்றபேழ்வாய்* வாளெயிற்றோர்க்கோளரியாய்*
அவுணன் பொன்றவாகம்வள்ளுகிரால்* போழ்ந்த புனிதனிடம்*
நின்றசெந்தீ மொண்டுசூறை* நீள்விசும்பூடிரிய*
சென்றுகாண்டற்கரியகோயில்* சிங்கவேள்குன்றமே. 1.7.5

1013:
எரிந்தபைங்கணிலங்குபேழ்வாய்* எயிற்றொடுஇதுஎவ்வுருவென்று*
இரிந்துவானோர் கலங்கியோட* இருந்தவம்மானதிடம்*
நெரிந்தவேயின் முழையுள்நின்று* நீணெறிவாயுழுவை*
திரிந்தவானைச்சுவடுபார்க்கும்* சிங்கவேள்குன்றமே. 1.7.6

1014:
முனைத்தசீற்றம் விண்சுடப்போய்* மூவுலகும் பிறவும்*
அனைத்துமஞ்சஆளரியாய்* இருந்தவம்மானதிடம்*
கனைத்ததீயும் கல்லுமல்லா* வில்லுடைவேடருமாய்*
தினைத்தனையும் செல்லவொண்ணாச்* சிங்கவேள்குன்றமே. 1.7.7

1015: ##
நாத்தழும்ப நான்முகனும்* ஈசனுமாய் முறையால் ஏத்த*
அங்கோராளரியாய்* இருந்தவம்மானதிடம்*
காய்த்தவாகை நெற்று ஒலிப்பக்* கல்லதர்வேய்ங்கழைபோய்*
தேய்த்ததீயால் விண்சிவக்கும்* சிங்கவேள்குன்றமே. 1.7.8

1016: ##
நல்லைநெஞ்சே! நாம் தொழுதும்* நம்முடை நம்பெருமான்*
அல்லிமாதர் புல்கநின்ற* ஆயிரம் தோளனிடம்,
நெல்லிமல்கிக் கல்லுடைப்பப்* புல்லிலையார்த்து*
அதர்வாய்ச் சில்லிசில்லென்று ஒல்லறாத* சிங்கவேள்குன்றமே. 1.7.9

1017:##
செங்கணாளி இட்டிறைஞ்சும்* சிங்கவேள்குன்றுடைய*
எங்களீசன் எம்பிரானை* இருந்தமிழ் நூற்புலவன்*
மங்கையாளன் மன்னுதொல்சீர்* வண்டறைதார்க் கலியன்*
செங்கையாளன் செஞ்சொல்மாலை* வல்லவர் தீதிலரே. 1.7.10

இரண்டாம் திருமொழி – காசையாடை

1058:##
காசையாடை மூடியோடிக்* காதல் செய்தான் அவனூர்*
நாசமாக நம்பவல்ல * நம்பி நம்பெருமான்*
வேயினன்னதோள் மடவார் * வெண்ணெயுண்டான் இவனென்று*
ஏசநின்ற எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே* (2) 2.2.1

1059:
தையலாள் மேல் காதல் செய்த* தானவன் வாளரக்கன்*
பொய்யிலாத பொன்முடிகள்* ஒன்பதோடு ஒன்றும்*
அன்றுசெய்த வெம்போர் தன்னில் * அங்கு ஓர் செஞ்சரத்தால் உருள *
எய்த எந்தை எம்பெருமான்* எவ்வுள் கிடந்தானே* 2.2.2

1060:
முன் ஓர் தூது * வானரத்தின்வாயில் மொழிந்து*
அரக்கன் மன்னூர் தன்னை * வாளியினால் மாள முனிந்து*
அவனே பின்னோர் தூது * ஆதிமன்னர்க்காகிப் பெருநிலத்தார்*
இன்னார் தூதனென நின்றான்* எவ்வுள் கிடந்தானே* 2.2.3

1061:
பந்தணைந்த மெல்விரலாள்* பாவைதன் காரணத்தால்*
வெந்திறலே ஏழும்வென்ற* வேந்தன் விரிபுகழ்சேர்*
நந்தன் மைந்தனாகவாகும்* நம்பி நம்பெருமான்*
எந்தை தந்தை தம்பெருமான்* எவ்வுள் கிடந்தானே* 2.2.4

1062:
பாலனாகி ஞாலமேழுமுண்டு* பண்டு ஆலிலைமேல்*
சாலநாளும் பள்ளிகொள்ளும்* தாமரைக் கண்ணன் எண்ணில்*
நீலமார் வண்டுண்டு வாழும்* நெய்தலந் தண்கழனி *
ஏலநாறும் பைம்புறவில்* எவ்வுள் கிடந்தானே* 2.2.5

1063:
சோத்த நம்பி என்று* தொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும்*
ஆத்த நம்பி செங்கணம்பி* ஆகிலும் தேவர்க்கெல்லாம்*
மூத்த நம்பி முக்கணம்பியென்று* முனிவர்த்தொழுதேத்தும்*
நம்பி எம்பெருமான்* எவ்வுள் கிடந்தானே. 2.2.6

1064:
திங்களப்பு வானெரிகாலாகி* திசைமுகனார்*
தங்களப்பன் சாமியப்பன்* பாகத்திருந்த *
வண்டுண் தொங்கலப்பு நீண்முடியான்* சூழ்கழல் சூடநின்ற*
எங்களப்பன் எம்பெருமான்* எவ்வுள் கிடந்தானே* 2.2.7

1065: ##
முனிவன் மூர்த்தி மூவராகி* வேதம் விரித்துரைத்த புனிதன்*
பூவை வண்ணன் அண்ணல்* புண்ணியன் விண்ணவர்கோன்*
தனியன் சேயன் தானொருவனாகிலும்* தன்னடியார்க்கு இனியன் *
எந்தை எம்பெருமான்* எவ்வுள் கிடந்தானே. 2.2.8

1066: ##
பந்திருக்கும் மெல்விரலாள்* பாவை பனிமலராள்*
வந்திருக்கும் மார்வன்* நீலமேனி மணிவண்ணன்*
அந்தரத்தில் வாழும்* வானோர் நாயகனாய் அமைந்த*
இந்திரற்கும் தம்பெருமான்* எவ்வுள் கிடந்தானே* 2.2.9

1067:##
இண்டை கொண்டு தொண்டரேத்த* எவ்வுள் கிடந்தானை*
வண்டு பாடும் பைம்புறவில்* மங்கையர்க்கோன் கலியன்,
கொண்ட சீரால் தண்தமிழ்செய்மாலை* ஈரைந்தும் வல்லார்*
அண்டம் ஆள்வது ஆணை* அன்றேல் ஆள்வர் அமர் உலகே* (2) 2.2.10

*ஆறும் திருமொழி – வாணிலாமுறுவல்*

*998:##*
*வாணிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள்* மாதரார் வனமுலைப் பயனே பேணினேன்**
*அதனைப் பிழையெனக்கருதிப்* பேதையேன் பிறவிநோயறுப்பான்**
*ஏணிலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி* இளையவர்க்கலவியின் திறத்தை நாணினேன்**
*வந்துஉன்திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.1*

999:
சிலம்படியுருவிற் கருநெடுங்கண்ணார்* திறத்தனாய்!அறத்தையேமறந்து*
புலம்படிந்துண்ணும் போகமேபெருக்கிப்* போக்கினேன் பொழுதினைவாளா*
அலம்புரிதடக்கை ஆயனே!மாயா!* வானவர்க்கரசனே!*
வானோர் நலம்புரிந்திறைஞ்சும் திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துளெந்தாய்!

1000:
சூதினைப்பெருக்கிக் களவினைத் துணிந்து* சுரிகுழல் மடந்தையர்திறத்து*
காதலேமிகுத்துக்கண்டவா* திரிந்ததொண்டனேன் நமன்தமர்செய்யும்*
வேதனைக்கு ஒடுங்கிநடுங்கினேன்* வேலைவெண்திரை அலமரக்கடைந்த நாதனே*
வந்துஉன் திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.3

1001:
வம்புலாங்கூந்தல் மனைவியைத்துறந்து* பிறர்பொருள் தாரம் என்றிவற்றை*
நம்பினார் இறந்தால்* நமன்தமர்ப்பற்றி எற்றிவைத்து*
எரிஎழுகின்ற செம்பினாலியன்ற பாவையைப்* பாவீ! தழுவெனமொழிவதற்க்குஅஞ்சி*
நம்பனே! வந்துஉன்திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.4

1002:
இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோதுஉற்றென்னு* இரந்தவர்க்கு இல்லையேயென்று*
நெடுஞ்சொலால்மறுத்த நீசனேன்அந்தோ!* நினைக்கிலேன் வினைப்பயன் தன்னை*
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்* படுவதோர் கொடுமிறைக்குஅஞ்சி*
நடுங்கிநான்வந்துஉன்திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.5

1003:
கோடியமனத்தால் சினத்தொழில்புரிந்து* திரிந்துநாயினத்தொடுந்திளைத்திட்டு*
ஓடியும்உழன்றும் உயிர்களேகொன்றேன்* உணர்விலேன் ஆதலால்*
நமனார்ப்பாடியைப்பெரிதும் பரிசழித்திட்டேன்* பரமனே! பாற்கடல்கிடந்தாய்!*
நாடிநான்வந்து உன்திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.6

1004:
நெஞ்சினால்நினைந்தும் வாயினால்மொழிந்தும்* நீதியல்லாதன செய்தும்*
துஞ்சினார்செல்லும் தொல்நெறிகேட்டே* துளங்கினேன் விளங்கனிமுனிந்தாய்!*
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில்பிரியா* வானவா! தானவர்க்கென்றும் நஞ்சனே!*
வந்துஉன்திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.7

1005: ##
ஏவினார்க்கலியார் நலிகவென்று* என்மேல் எங்ஙனே வாழுமாறு?*
ஐவர்கோவினார்செய்யும் கொடுமையைமடித்தேன்* குறுங்குடி நெடுங்கடல்வண்ணா!*
பாவினார்இன்சொல் பன்மலர்க்கொண்டு* உன்பாதமேபரவி நான்பணிந்து*
என்நாவினால்வந்துஉன்திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துள் எந்தாய்! 1.6.8

1006: ##
ஊனிடைச்சுவர்வைத்து என்புதூண்நாட்டி* உரோமம்வேய்ந்து ஒன்பதுவாசல்*
தானுடைக்குரம்பைப் பிரியும்போது* உந்தன்சரணமேசரணம் என்றுஇருந்தேன்*
தேனுடைக்கமலத் திருவினுக்கரசே!* திரைகொள்மா நெடுங்கடற்கிடந்தாய்!*
நானுடைத் தவத்தால் திருவடியடைந்தேன்* நைமிசாரணியத்துளெந்தாய்! 1.6.9

1007:##
ஏதம்வந்து அணுகா வண்ணநாமெண்ணி* எழுமினோ தொழுதுமென்று*
இமையோர் நாதன்வந்துஇறைஞ்சும்* நைமிசாரணியத்தெந்தையைச் சிந்தையுள்வைத்து*
காதலேமிகுத்த கலியன்வாயொலிசெய்* மாலைதாம் கற்றுவல்லார்கள்*
ஓதநீர்வையகம்ஆண்டு வெண்குடைக்கீழ்* உம்பரும்ஆகுவர் தாமே. 1.6.10

## ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச்செய்த கண்ணி நுண்சிறுத்தாம்பு

அவிதித விஷயாந் தரஶ்ஶடாரே
ருபநிஷதா முபகா நமாத்ரபோக:
அபிசகுணவஶாத் ததேகஸேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து.

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த,
மாறன் சடகோபன் வண்குருகூர்– ஏறு,எங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வார் அவரே அரண்.

** கண்ணி நுண் சிறுத் தாம்பினால் * கட்டுண்ணப்–
பண்ணிய பெரு மாயன், * என்னப்பனில், *
நண்ணித் தென்குருகூர் * நம்பி என்றக்கால், *
அண்ணிக்கும் அமுதூறும் * என் நாவுக்கே. (2) (1)

நாவினால் நவிற்று * இன்பம் எய்தினேன், *
மேவினேன் * அவன் பொன்னடி மெய்ம்மையே, *
தேவு மற்றறியேன் * குருகூர் நம்பி, *
பாவின் இன்னிசை * பாடித் திரிவனே. (2)

திரி தந்தாகிலும் * தேவ பிரானுடை, *
கரிய கோலத் * திருவுருக் காண்பன் நான், *
பெரிய வண்குருகூர் * நகர் நம்பிக்காள்–
உரியனாய், * அடியேன் * பெற்ற நன்மையே. (3)

நன்மையால் மிக்க * நான்மறை ஆளர்கள், *
புன்மை ஆகக் * கருதுவர் ஆதலின், *
அன்னையாய் அத்தனாய் * என்னை ஆண்டிடும்–
தன்மையான், * சடகோபன் * என் நம்பியே. (4)

நம்பினேன் * பிறர் நன்பொருள் தன்னையும், *
நம்பினேன் * மட வாரையும் முன்னெல்லாம், *
செம்பொன் மாடத் * திருக்குருகூர் நம்பிக்கு–
அன்பனாய், * அடியேன் * சதிர்த்தேன் இன்றே. (5)

இன்று தொட்டும் * எழுமையும் எம்பிரான், *
நின்று தன் * புகழ் ஏத்த அருளினான், *
குன்ற மாடத் * திருக்குருகூர் நம்பி, *
என்றும் என்னை * இகழ்விலன் காண்மினே. (6)

கண்டு கொண்டென்னைக் * காரி மாறப்பிரான், *
பண்டை வல்வினை * பாற்றி அருளினான், *
எண்திசையும் * அறிய இயம்புகேன், *
ஒண்தமிழ் * சடகோபன் அருளையே. (7)

அருள் கொண்டாடும் * அடியவர் இன்புற, *
அருளினான் * அவ்வருமறையின்பொருள், *
அருள்கொண்டு * ஆயிரம் இன்தமிழ் பாடினான், *
அருள்கண்டீர் * இவ்வுலகினில் மிக்கதே. (8)

மிக்க வேதியர் * வேதத்தின் உட்பொருள் *
நிற்கப் பாடி * என் நெஞ்சுள் நிறுத்தினான், *
தக்க சீர் * சடகோபன் என் நம்பிக்கு, * ஆட்-
புக்க காதல் * அடிமைப் பயனன்றே? (9)

** பயனன்று ஆகிலும் * பாங்கலர் ஆகிலும் *
செயல் நன்றாகத் * திருத்திப் பணிகொள்வான், *
குயில் நின்றார் பொழில் சூழ் * குருகூர் நம்பி, *
முயல்கின்றேன் * உன்தன் மொய்கழற்கு அன்பையே. (2) (10)

** அன்பன் தன்னை * அடைந்தவர்க்கட்கு எல்லாம்-
அன்பன், * தென்குருகூர் * நகர் நம்பிக்கு, *
அன்பனாய் * மதுரகவி சொன்னசொல்-
நம்பு வார்பதி, * வைகுந்தம் * காண்மினே. (2) (11)

ஸ்ரீ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்

**அடைக்கலப் பத்து**

*ராமானுஜதயா பாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |*
*ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||*

*சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்*
*பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று*
*தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு*
*வானேறப் போமளவும் வாழ்வு*

*பத்தி முதலாமவற்றுள், பதி எனக்கு கூடாமல் /*
*எத்திசையும் ஓழன்றோடி, இளைத்துவிழும் காகம்போல் **
*முத்தி தரும் நகரேழில், முக்கியமாம் கச்சிதன்னில் /*
*அத்திகிரி அருளாளர்க்கு, அடைக்கலம் நான் புகுந்தேனே. (2)*

*சடைமுடியன் சதுமுகன் என்று, இவர்முதலாந் தரமெல்லாம் /*
*அடையவினைப் பயனாகி, அழிந்துவிடும் படிகண்டு **
*கடிமலராள் பிரியாத, கச்சிநகர் அத்திகிரி /*
*இடமுடைய அருளாளர், இணையடிகள் அடைந்தேனே.*

*தந்திரங்கள் வேறின்றித், தமதுவழி அழியாது /*
*மந்திரங்கள் தம்மாலும், மற்றுமுள்ள வுரையாலும் **
*அந்தரங்கண்டு அடிபணிவார், அனைவர்க்கும் அருள்புரியும் /*
*சிந்துரவெற்ப் இறையவனார், சீலமல்லது அறியேனே.*

*காகம் இரக்கதன் மன்னர், காதலி கத்திரபந்து /*
*நாகம் அரன் அயன் முதலா, நாக நகரார் தமக்கும் **
*போகமுயர் வீடுபெறப், பொன்னருள் செய்தமை கண்டு /*
*நாகமலை நாயகனார், நல்லடிப்போது அடைந்தேனே.*

*உகக்கும் அவை உகந்து, உகவாவனைத்தும் ஒழிந்து / உறவுகுண –*
*மிகத்துணிவு பெறவுணர்ந்து, வியன்காவல் எனவரித்துச் **
*சகத்திலொரு புகலிலாத், தவமறியேன் மதிட்கச்சி /*
*நகர்கருணை நாதனை, நல்லடைக்கலமாய் அடைந்தேனே.*

*அளவுடையார் அடைந்தார்க்கும், அதனுரையே கொண்டவர்க்கும் /*
*வளவுரை தந்தவனருளே, மன்னிய மாதவத்தோர்க்கும் **
*களவொழிவார் எமரென்ன, இசைந்தவர்க்குங் காவலராம் /*
*துளவமுடி அருள்வரதர், துவக்கில் எனை வைத்தேனே.*

*உமதடிகள் அடைகின்றேன் என்று, ஒருகால் உரைத்தவரை /*
*அமையுமினி என்பவர்போல், அஞ்சலெனக் கரம்வைத்து **
*தமதனைத்தும் அவர்தமக்கு, வழங்கியும் தாம் மிகவிளங்கும் /*
*அமைவுடைய அருளாளர், அடியிணைகள் அடைந்தேனே.*

*திண்மை குறையாமைக்கும், நிறைகைக்குந் தீவினையால் /*
*உண்மை மறவாமைக்கும், உளமதியில் உகக்கைக்குந் **
*தண்மை கழியாமைக்கும், தரிக்கைக்குந் தணிகைக்கும் /*
*வண்மையுடை அருளாளர், வாசகங்கள் மறவேனே.*

சுரிதி நினை இவையறியுந், துணிவுடையார் தூமொழிகள் /
பரிதிமதி ஆசிரியர், பாசுரஞ்சேர்ந்து அருக்கணங்கள் *
கருதியொரு தெளிவாளாற், கலக்கமறுத்து அத்திகிரிப் /
பரிதிமதி நயனமுடை, பரமனடி பணிந்தேனே.

(சாற்றுமுறை பாசுரம்) *
திருமகளும் திருவடிவும், திருவருளும் தெள்ளறிவும் /
அருமையிலாமையும் உறவும், அளப்பரிய வடிவரசுங் *
கருமம் அழிப்பளிப்பு அமைப்புங், கலக்கமிலா வகைநின்ற /
அருள் வரதர் நிலையிலக்கில், அம்பென நான் அமிழ்ந்தேனே. (2)

(சாற்றுமுறை பாசுரம்) *
ஆறுபயன் வேறில்லா, அடியவர்கள் அனைவர்க்கும் /
ஆறுமதன் பயனுமிவை, ஒருகாலும் பலகாலும் *
ஆறுபயன் எனவேகண்டு, அருளாளர் அடியிணைமேல் /
கூறியநற் குணவுரைகள், இவைபத்தும் கோதிலவே. (2)

## ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மகாதேசிகன் அடைக்கலப்பத்து

(31ம் பட்டம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் அருளிச் செய்தது)

தனியன்கள்

லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ வரஸாஸன ஸேகரோ ய:
தார்ஷ்யேண நாதமுகரேண ததுத்யமே ச |
ஆஜ்ஞப்த ஆதிசடகோப யதீந்த்ர காதா:
சக்ரே பராங்குஸ யதீந்த்ரமஹம் தமீடே ||

ஒன்பது உரு நரசிங்கனும் உகந்து உறையும் திருப்பதிகள்
அன்புடனே பணி செய்யும் அற்புதனும் ஆசிரியன்
முன்புற்ற சடகோபன் மொய்கழலை ஏத்தி யெழும்
பண்புடைய பராங்குசந்தன் பாத மலர் பரவினமே !

ஆதிமறையுருவான, ஆதிப்புள் வெற்பதனில் /
சோதி யென உலகமெல்லாம், சுகம் பெறவே வந்து உதித்த *
ஆதி குரு நரசிங்கன், அருளாலே யோகியான /
ஆதிவண் சீர்ச் சடகோபன், அடியிணை என் முடி மணியே ! (2)

மணியான வார் உயிராம், மணி முத்துத் தாழ் வடத்து /
மணியாகப் பெரும் புதூர்ப், புரம் தன்னில் வந்து உதித்துப் *
பிணி தீர்த்த தேசிகனே, பின்னும் அவன் வந்து அனைத்தும் /
பணிய நின்ற சடகோபன், பதப் பூவை அடைந்தேனே.

அடைந்து என்றும் அடங்காத, ஆங்கார மாமலையைத் /
தடிந்திட்ட பெரியோனைத், தடுத்த திறல் இரணியனை *
இடந்திட்ட நரசிங்கன், இணை அடியை எப்பொழுதும் /
இடங்கிட்டி உறைகின்ற, இம் முனியை அறிந்தேனே

அறிந்து என்றும் அவன் அருளே, அம்புவியல் புகலின்றேச் /
செறிந்து எங்கும் செல நின்ற, செல்வம் உடை வேங்கடவன் *
அறம் திகழும் மாமணியின், அவதாரமாம் குருவே /
நிறைந்து இங்கே இம் முனியாய், நிற்கின்றது உரைப்பேனே

உரைத்த தன் உத்தம குணமே, உய்வதென்று தன் அருளால் /
கரந்து எங்கும் ஓங்கி இறைவன், கலியான குணங்களையே *
உரைக்கின்ற பாடியத்தை, உம்பர் தொழ எப்பொழுதும் /
உரைக்கின்ற மா முனியை, உரைத்து உரைத்து இன்று உயர்ந்தேனே !

உயர்ந்தது என்றும் உத்தனமாய், உதவும் சீர்த் திரு மாலின் /
பயம் தவிர்க்கும் மெய்ப் பதமே, பதம் என்று பேசுகின்ற *
மயர்வு இல்லா மூன்றினது, மாசறு சீர்ச் சாரம் எங்கும் /
உயர் பெறுத்தும் யோகி பதம், உற்றதலாம் அற்றிலனே

*
மற்றவனாம் தேசிகன் தன், வண் புகழின் வண்மை எண்ணிப், /
பற்றிலன் ஆயவன் பூண்ட, பாங்குடை நற் கோசம் ஏந்தி *
எத்திசையும் எமக்கோசம், ஏந்துகின்ற கையுடனே /
புத்தியுள்ளே வரும் யோகிப், பொன்னடியை மறவேனே. (2)

*
மறவாதே மா  நிலத்தில், வண் புகழின் வண்மை எண்ணிப் /
பிறவாதே பூமிதனில், பின் அனைத்தும் உய்ய எண்ணி *
இறையவனே புரட்டாசித், திருக் கேட்டையில் குருவாய்ப் /
பிறந்திட்ட சடகோபன், பொன் அருள் நான் பெற்றேனே. (2)

*
பெற்ற தாயாய் பத்தர், பேதம் இல்லத் தந்தையுமாய் /
மற்றுமுள்ள சுற்றமுமாய், மன்னிய பொன் இராசியுமாய் *
எத் திசையும் என்னுடைய, இன் உருவாம் பாக்கியமாய்,
உற்ற முனி சடகோப! உன் கழல்  அகலேனே. (2)

(சாற்றுமுறை பாசுரம்) *
அகலாமே மாறன் உரை, அருத்தமுடன் அனைவர்க்கும் /
தகவாலே உரைக்கின்ற, தன்மை உள்ள மா முனியைப் *
புகலாலே பற்றினார்க்குப், புரக்கின்ற நரசிங்கன் /
தகவாலே முடி சூடித், தரித்தாரைப் பற்றினனே. (2)

(சாற்றுமுறை பாசுரம்) *
பத்தியுள்ள சீநிவாச, பர யோகி தன் பதத்தில் /
பத்தி பெறும் யோகி எனும், பராங்குசன் தன் சீர் உரையாம்*
எத்திசையும் ஏத்த நின்ற, சடகோபன் அந்தாதி /
முத்தி தரு நர சிங்கன், முன் அருளுக்கு ஆதினமே. (2)

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

**********************************************************************

**ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருசிம்ஹன் அடைக்கலப்பத்து**
*(34ம் பட்டம் (அத்திப்பட்டு) ஸ்ரீமத் அழகிய சிங்கர் அருளிச் செய்தது)*

*தனியன்கள்*

*லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் அநுசிந்த்ய தயாம் புராஸிம்*
*லக்ஷ்மீம் ததாங்க ஸரஸீருஹ ராஜஹம்ஸீம் |*
*லக்ஷீ சகார நரஸிம்ஹ பத ப்ரபத்திம்*
*யஸ் தம் ஶடாரி யதிராஜம் அஹம் தமீடே ||*

*திரு மந்திரத் திருப்பதியாம் திரு மதுராந்தக நகருள்*
*உருவம் தரி அரங்கேசச் சடகோபன் தனி அருளால்*
*திரு மந்திர உரை சுரந்த சடகோப யதி பதி செய்*
*திரு வந்து உறை மடி உடையான், அடைக்கலப் பத்து இதுவேயாம்.*

*
*மாமலராள் மன்னி உரை, மடி உடையான் மஞ்சு உறையும் /*
*மா மலையில் தணி இலகும், மா குருவாய் மருவரத்தை **
*மாமறையோர் வானவர்க்கும், வழங்கி அருள் மா முனியாம் /*
*மா மதி சேர் நரசிங்கன், மலர் அடியை மன்னினனே (2)*

*பேர் வலி சேர் பொன் பெயரோன், பேர் உடலை பிளந்து உகிரால் /*
*நார் கிழிப்பார் அதுபோல, நன்றாகக் கிழித்திட்டுச் **
*சார்வளைசேர் இந்திரையும், தானும் உறை நரசிங்கன் /*
*பார் புகழும் அடி மலரைப், பணிந்திட்டுப் பாங்கினனே.*

*மறையோனும் மாமதி சேர், மறு சடையன் இந்திரனும், /*
*மறை முனிவருடன் வந்து, மலர் அதனால் இறைஞ்சி நிற்கக் **
*குறை முனிவர் அரம்பையரும், கூடி மறை பாடி நிற்க /*
*நறை மலராளுடன் உறையும், நம் குருவை அடைந்தேனே.*

*கொள்ளி எழு கோள் அவுணன், குடல் அலறப் பாய்ந்திட்டுத் /*
*தள்ளி அவன் தலை காலைத், தனித் தனியே பிரித்திட்டும் **
*அள்ளி அவன் உதிரத்தை, ஆசையுடன் உண்ட பிரான் /*
*வெள்ளி அலர் உதிரக்கை, வேண்டி வந்து பணிந்தேனே*

*காரணமாய்க் காரியமாய்க், கண்டும் இவ் உலகத்தில் /*
*பூரணமாய் உறைகின்ற, புண்ணியனாம் இவன் என்று **
*நாரணன் தன் மெய் உருவம், இதுவே யென்று அனைவர்க்கும் /*
*சீர் அணிந்து வெளி நின்ற, சிங்க குரு அடைந்தேனே*

** இங்குளன் அங்குளன் அல்லன், என்று உரைக்கக் கூடாமே /*
*எங்கும் உளன் என் கண்ணன், என்று உறைத்த தன் மகனைக் **
*குங்குமம் போல் சிவந்த கண்ணன், குருட்ட அவுணன் உதைத்திட்ட /*
*சங்கணி தூண் பிளந்த பிரான், சதிரடியை அடைந்தேனே. (2)*

*ஓர் உருவே ஈர் உருவாம், என் தனக்குள் கண்ணன் உடைய /*
*சீர் உருவைச் சிந்தை உளர், சிந்தியுங்கள் எனத் திகழும் **
*பேர் உருவ இரணியனைப், பிணம் படவே கிழித்து உகந்த /*
*ஆர் உருவன் நரசிங்கன், அடியன்றி மற்றிலனே.*

அஞ்சிறை சேர் அணி பறவை, அணைந்திட்ட வடிவு உடையான் /
அஞ்சிரம் சேர் மணி அனந்தன், ஆடியிடு மணி முடியான் *
அஞ்சு உருவ அவுணன் உடல், அஞ்சு ஆறாய்ப் பிளந்திட்ட /
நஞ்சு உருவன் எம் பெருமான், தமியேன் உள் கலந்தானே.

* ஆறும் அவன் பயனும் அவன், அனைத்து உலகும் அவனேயாம் /
நாறு துழாய் நரசிங்கன், நல்ல மறையும் உளது இதுவே *
கூறு மதி மதி சேரும், குணம் உடைய வெண் மதியோர் /
கூறுகின்ருர் இப்படியே, குணம் இதுவே வேதியர்க்கே. (2)

(சாற்றுமுறை பாசுரம்) *
பத்து உருவாய் உலகு அளித்த, பரமன் உரு ஒன்பதையும் /
பத்து உருவாய்ப் பணிந்து நின்ற, பரம குரு தனி அருளால் *
பத்து உருவாம் நரசிங்கன், பதக் கமலம் பற்று முறை /
பத்து உருவாம் பாட்டு உரைத்துப், பரம பதம் பணிந்தேனே. (2)

(சாற்றுமுறை பாசுரம்) *
அனைத்து உலகும் வாழ வந்த, ஆதி நரசிங்கன் அடி /
தினைத்து அனையும் மறவாத, சிந்தை உள்ள சடகோபன் *
தனத்து உறையும் உடையவரும், தாங்கும் உரை மா முனிவன் /
மனத்துவைப் பார் ஈர் ஐந்தும், மன் வாழ்வார் இவ் உலகே. (2)

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாசேவக
ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

## சாற்றுமுறை

### ஸ்ரீ தேசிகன் வாழிதிருநாமம்

ஸர்வதேஶ தஶாகாலேஷ்வவ்யாகத பராக்ரமா
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞாவர்த்ததாமபிவர்த்ததாம்

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யாபிநீபூயாத் ஸாஹிலோககிதைஷிணீ

ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரீயமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரீயமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய

நாமோ ராமாநுஜார்யாய வேதந்தார்த்த ப்ராதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞ்யாநவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்

வாழி யிராமாநுசப்பிள்ளான் மாதகவால்
வாழு மணிநிக மாந்தகுரு, – வாழியவன்
மாறன் மறையும் இராமாநுசன் பாடியமும்
தேறும் படியுரைக்கும் சீர்

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ, – ண்யானியர்கள்
சென்னியணி சேர்த்தூப்புல் வேதாந்த தேசிகனே
இன்னுமொரு நூற்றாண்டிரும்

வாழியணி தூப்புல் வரு நிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதாரவிந்தமலர் – வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்

### ஸ்ரீஸந்நிதி வாழிதிருநாமம்

ஸர்வதேஶ தஶாகாலேஷ்வவ்யாகத பராக்ரமா
ஆதிவண்ஶடகோபாஜ்ஞாவர்த்ததாமபிவர்த்ததாம்

ஆதிவண்ஶடகோபாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யாபிநீபூயாத் ஸாஹிலோககிதைஷிணீ

நமோ வரத விஷ்ணுவார்ய நயனாநந்த தாயினே
வாத்ஸ்யாய வரதார்யாய வாதினீஹார பாஸ்வதே
கேசவார்ய க்ருபா பாத்ரம் தீசமாதிகுணார்ணவம்
ஸ்ரீஶடாரி யதீசாரம் தேசிகேந்த்ரமகம் பஜே

செம்பொன்சேர் சிங்கவெற்பு செழிக்கவந்தோன் வாழியே
சீர் பெரும்பூதூர் முனியே ஜகத்துதித்தோன் வாழியே
பண்புடைய அம்மாள்தன் பரிவுடையோன் வாழியே
பாஷ்யத்தை பலகாலும் பகுத்துரைப்போன் வாழியே
பொன்பெயரோன் மார்விடந்தான் புகழுரைப்போன் வாழியே
புரட்டாசிக் கேட்டைதனில் புவியுதித்தோன் வாழியே
தண்புகழ் சேர் மாறனுரை சாற்றிடுவோன் வாழியே
சடகோப மாமுனிவன் தாமரைத்தாள் வாழியே

ரஹஸ்யத்ரயஸாரத்தின் ரசமுரைப்போன் வாழியே
ரஹஸ்யமுப்பத்திரண்டும் ரசித்துரைத்தான் வாழியே
அகவாயில் உயிர்களுய்ய அருள்படைத்தான் வாழியே
ஆழ்வார்தம் க்ருபையான வம்சமுத்ரை வாழியே

திகழ்திருநூல் திருவேணத்திருச்சிகையும் வாழியே
திருவிலச்சினை சேர்ந்த திருதோள்கள் வாழியே
அகன்ஞாலத்தவரறிய ஆறளித்தான் வாழியே
அங்குதன்னில் ஸ்ரீகோசம் அழகுடனே வாழியே

ஓங்கு மலை வாழ்க  அஹோபிலம்தான் வாழ்க
பாங்காய் சடகோபன்பா வாழ்க – பூங்கமலந்
தன்னே அணிதாராய் சடகோப மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்

ஸ்ரீ தேசிகன் மங்களம்
ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மங்களம்